## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | **முத்துராமலிங்கம்** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**05.12.2023 OS No. 51/2022 வா.சா.1 முத்துராமலிங்கம் ஆஜர்**
**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1)17.07.1969ம் தேதியிட்டு கழுங்காயிக்கு மாயாண்டித்தேவர் ரூ.86.50க்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் ரூ.100க்கு கீழ்பட்டது என்பதால் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பட்டா எண்.1244க்கு என் அப்பா பெயரில் உள்ள கணினி பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1602க்கு என் அய்யா முத்துக்கருப்பன் பெயரில் உள்ள கணினி பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**2)** 16.08.1971ம் தேதியிட்டு தண்டிததேவருக்கு முத்துக்கருப்பத்தேவர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பட்டா எண்.1024க்கு 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்திற்கான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 19.03.2022ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**3)**01.03.1926ம் தேதியிட்டு ஆதித்தேவர் தனக்காகவும் மைனருக்காகவும் மாலைமணிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**(முதல் விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.